Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு ஐப்பசிமீ உ௨உ வெள்ளிக்கிழமை (8 November. 1963) [இல-௩௨

# 'ஈழத்துச் சிங்கம்' எங்கள் தமிழ் நாவலர்

—————o—————

## 7—12—63 குருபூசைத்தினத்தைச் சிறப்புறக் கொண்டாடுக

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய அந்நியர் ஆட்சியால் ஈழநாட்டில் தமிழும் சைவ சமயமும் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தன. இவர்கள் தங்கள் சமயமாகிய கிறிஸ்த சமயத்தைப் பரப்புவதற்காகப் பல சூழ்ச்சிகளைச் செய்தனர். பட்டம் பதவிகளைக் காட்டி நம்மவரை மதம்மாறச் செய்தனர் எமது கலாச்சாரங்களை மறக்கச் செய்தனர் மேனாட்டுக் கலாச்சாரங்களைப் புகுத்தினர். இப்படியான காலத்திலும் நமமவருட் சிலர் சைவ தமிழ் கலாச்சாரங்களைப் பேணிக் காத்துவந்தனர். அப்பெரியார்களை நாம் என்றும் மறந்துவிட முடியாது.

ஆங்கில ஆட்சியின் ஆரம்ப காலத்தில் ஈழத்துச் சிங்கம் போல் தோற்றினர் நாவலர். இவர் தோற்றிய காலம் சைவமும் தமிழும் அழிந்தொழியும் நிலையில் இருந்தன. எமது கலாச்சாரப் பாரம்பரியங்கள் எல்லாம் பிறந்த நிலைக்கு வந்தது. அக்காலத்தில் தமிழ் நாடு முழுவதையுமே தட்டியெழுப்பி மறுமலர்ச்சியூட்டினர் நாவலர்.

யாழ்ப்பாணத்து நல்லூரில் 1822-ம் ஆண்டில் அவதரித்த இவர் தமது ஆயுட்காலம் முழுவதையும், தமிழ் - சைவம் இரண்டிற்குமாகத் தியாகஞ் செய்தார். தமிழ் நாடு எங்கும் இவற்றைப் பரவச் செய்வதையே தமது இலட்சியமாகக் கொண்டார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களை மிகக் குறுகிய காலத்தில் கற்றுப் பெரும் புலவராக விளங்கினர். ஏட்டு வடிவில் இருந்து அழியும் நிலையில் உள்ள தமிழ்ச்சங்க நூல்கள் பலவற்றைப் புத்தக ரூபத்தில் பிழையின்றி வெளியிட்டு, தமிழ் மக்களுக்கு உதவினர். இலகுவான வசனநடையை உலக வழக்கில் கொண்டுவந்த முதற்பெரியார் நாவலர். மாணவர்களுக்கேற்ற பல நூல்களையும் எளிய வசன நடையில் செய்துதவினர். இலங்கை இந்தியா ஆகிய நாடுகளில் அளப்பரிய சேவை செய்துள்ளார். கிறிஸ்துமத நூலாகிய பைபிளைத் தூய தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்துதவினர்.

நீதியும் நேர்மையும் தமிழ் மக்களிடத்தில் நிலைக்க வேண்டுமென எடுத்துக் காட்டினர். இவை தவறி நடந்தவர்களைக் கண்டித்துத் திருத்தினர். ஒழுக்கம், பண்பாடு தவருது நடந்துவர வேண்டுமென விளக்கிக்காட்டினர். பிரசங்கம் மூலமாக நாட்டின் சீர்கேடுகளையும் சமய உண்மைகளையும் எடுத்து விளக்கினர் யாழ்ப்பாணத்தைச் சீர்திருத்தமான முறையில் நடக்கச் செய்து வைத்தார்.

தமிழ், சமயப்பணிகளில் மாத்திரமன்றி பொதுப்பணியிலும் எல்லாருக்கும் உதவி செய்துள்ளார். அரசாங்க அதிகாரிகள் அக்காலத்தில் செய்த அநியாயங்களை அம்பலமாக்கி மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்தார். அரசியலிலும் பெரும்பங்கு கொண்டுழைத்தார். சேர். பொன். இராமநாதன் அவர்களை இலங்கைச் சட்டசபைப் பிரதிநிதி

**திரு. சி. சிவரத்தினம் ஆசிரியர்**
நாவலர் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

### நற் சிந்தனை

கறுத்திருண்ட கண்டத்தின்
பெருமை தோன்றும்
கதிகாட்டுங் கண்ணிணைகள்
கலந்து தோன்றும்
செறுத்தவர்தம் புரமட்ட
சிரிப்புத் தோன்றும்
தேவர்கணம் சூழ்ந்திருக்கும்
சிறப்புத் தோன்றும்
ஒறுத்தவர்த மெண்பெல்லா
முடம்பில் தோன்றும்
ஒளிதோன்றும் ஓங்கார
வாசி தோன்றும்
சிறுத்தவிடை யுமையாளோர்
பாகந் தோன்றும்
சிவசிவா சீவன்சிவ
னெனக்கண் டேனே.

### வெளியீட்டு விழா

நிகழும் ஐப்பசிமீ இருபத்து மூன்றும் நாள் 9-11-63 சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரை வெளியீட்டுவிழா முன்னாள் அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திருவாளர்கள் மு சபாரத்தினம் அவர்கள், சி.உ. சோமசேகரம் அவர்கள், கே. பி. ஹரன் அவர்கள், ச அம்பிகைபாகன் அவர்கள், க. ச. அருணந்தி அவர்கள், நாவற்குழியூர் நடராசன் அவர்கள், ஆ. சதாசிவம் அவர்கள், சு. நடேசபிள்ளையவர்கள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆகியோர் நூல்பற்றிப் பாராட்டிப் பேசுவர். பதற்றுப்பத்து ஆராய்ச்சியுரையாசிரியர், பண்டிதர், சு. அருளம்பலவனர் அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்.

### சமயப் பிரசங்கம்

இன்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் கைதடி வயோதிபர் இல்லத்தில் சைவசமயப் பிரசாரகர் பண்டிதர் திரு. இரா. சிவசுப்பிரமணியம் அவர்கள் "இறைவாழ்வில் முதியோர் பங்கு" என்னும் விடயம்பற்றிப் பேசுவார்கள். ——

### இசை-நாட்டிய விழா

இலங்கை இசைச் சங்க யாழ் - கிளையின் இசை, நாட்டிய விழா யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் இம் மாதம் 7, 8, 9, 10-ம் திகதிக [illegible] மாலை 6 மணி முதல் நடைபெறுகின்றன.

### அ. இ. கிராம சேவையாளர் சகாயநிதிச் சங்கம்

———

அகில இலங்கைக் கிராம சேவையாளரின் நலன்கருதி ஒரு சகாய நிதியை ஏற்படுத்தும் நோக்கமாக ஒரு ஆரப்ப கூட்டம் இம்மாதம் 4-11-63 திங்கட்கிழமை வலி-வடக்குக் கிராமாதிகாரி கந்தோரில், மாவிட்டபுரம் கிராம சேவையாளர் திரு. ந நடராசா அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. மேற்படி சங்க உறுப்பினர் பின்வருமாறு: தலைவர்: திரு. ந. நடராசா கி. சே, மாவிட்டபுரம், காரியதரிசி: திரு. ப. தர்மலிங்கம் கி. சே. மயிலிட்டி தெற்கு; தனதிகாரி: திரு, க. இலங்கைநாயகம் கி. சே. புன்னாலைக்கட்டுவன். நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

### நல்லூரில் சமயப் பிரசாரம்

——

இன்று மாலை இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க, சமயப்பிரசாரசபையாதரவில் சைவபரிபாலன சபையின் ஒத்துழைப்புடன் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் ஆசிரியர் திரு. சு. சதாசிவம் அவர்கள் "அடியார் கடமை" என்னும் விடயம் பற்றிப் பேசுவார்கள்.

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனர் வணங்கி மகிழ்ந்தெழும்போழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

# தீபாவளித் திருநாளின் தத்துவம்

—————0—————

துலா இராசியில் சூரியன் நிற்க தேய்பிறைச் சந்திரனின் பதின்நான்காம் நாளாகிய சதுர்த்தசியில் சூரியோதயத்திற்கு முன் எண்ணெய் தேய்த்து முழுகி நரக சதுர்த்தசி ஸ்நானம் முடித்துக் கொண்டு புத்தாடை அணிந்து கடவுளை வணங்கி ஆசிபெற்றுத் தம் சுற்றத்தோடு உண்டு களிக்கும் திருநாள்தான் தீபாவலிப்பண்டிகை, இத் தினத்தில்தான் விக்கிரம சம்வத் புதுவருடம் தொடக்கும் புதுக் கணக்குப் பதிதல் பழைய கடன்கள் கொடுத்துவிடல், தான தருமம் முதலிய கருமங்கள் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்வதும் பாவமான கருமங்களை விலக்குவதும் இன்றியமையாதது.

இரவு வரிசை வரிசையாக தீபம் ஏற்றுவதும் சில ஊர்களில் உள்ள வழக்கமாகும். இன்னும் சிலர் முதன்நாள் பிரதோச விரதம் முடித்து

"சௌரிராயன்"

இரவு விழித்திருந்து சந்திரோதயத்தில் ஸ்நானம் செய்வார்கள். இவை எல்லாம் புண்ணியச் செயல்கள். அறிவிலிகள் ஆடு கோழிகளைக் கொன்று மாமிச பட்சணங்கள் விசேஷமாக தீபாவலிக்குப் பரிமாறுகிறார்கள். குடிவகைகளும் இடம்பெறும். இவை எல்லாம் பாவச்செயல்களே. ஆன்ம ஈடேற்றத்திற்குத் தடையாய் இருக்கும் இயமராசனுக்கு அடிமைப்பட வேண்டி வரும். துலா இராசி இயமனையும் சித்திர குப்தர் என்னும் நுண்ணிய கணக்கரையும் எமக்கு நினைவூட்டும். சித்திர குப்தர் நாம் செய்யும் பாவ புண்ணியங்களை வாசிக்க இயமஇராசா தன் தராசில் பாவ புண்ணியங்களை நிறுத்து எமக்கேற்ற கதியை நியமிப்பார். சிலரைச் சொர்க்கத்திற்கும் மறுபேரை நரகத்துக்கும் அனுப்பும்படி தீர்ப்பார். இந்த முறையிலிருந்து தப்பிக் கன்மத்திற்கு ஈடுபடாமல் பேரின்பம் அனு

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

### நுண்தொழில் இளைஞன்

10-11-63 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-45 மணியளவில் யாழ்ப்பாணம் — கலட்டி தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற இருக்கும் நுண்தொழில் இளைஞன் இரண்டாவது ஆண்டு மலர் வெளியீட்டு விழா கல்லூரி அதிபர் திரு. க. நாகலிங்கம் B SC. அவர்களகள் தலைமையில் நடைபெறும். ——

## படுந்துயர் தீர்க்கும் வேலா!

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: அடாணு :: தாளம்: ஆதி

பல்லவி

நடமிடும் மயில்மிசை வருவாயே - திரு
ஞானபொற் பாதம் தருவாயே (ந)

அநுபல்லவி

படமுடியாத பவவினையாலே
படுந்துயர் தீர்க்கும் பயிலுமுன் வேலே (ந)

சரணம்

கந்தா முருகா கார்த்தி கேசா
கடம்பா திருமால் கன்னியர் நேசா
செந்தமிழ்க் குமரா செந்தூர் வாசா
திகழ் மலையழகா சிவகுரு ராசா. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

எதிர்வரும் 15-11-63 வெள்ளிக் கிழமை தீபாவலித் திருநாளை முன்னிட்டு அன்றைய தினம் இந்துசாதன அலுவலகமும் சைவப்பிரகாசஅச்சகமும் திறக்கப்படமாட்டா. -அதிபர்.

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
சோபகிருது ஹூ ஐப்பசி மீ உஉ வெள்ளிக்கிழமை

## செய்தித் தாள்கள் எய்த இருக்கும் கதி!

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயகவின் ஆட்சி தொடங்கவே தொடங்கிய ஒரு வஞ்சனைத் திட்டம் பலவேறு தடைகளாற் பின் போடப் பெற்று இப்பொழுது ஆணையாளர் விசாரணையாக உருவெடுத்திருக்கின்றது. மூவர் அமைந்த ஆணையாளர்குழு செய்தித்தாள்களுக்கு ஆவன செய்வதற்கு விசாரணை நடத்தப்போகின்றார்களாம. இம் மூவரில் ஒருவர் உயர் நீதி அரச பதவி வகித்து ஓய் வெடுத்திருக்கின்றவர். எனவே இப் பணிக்குப் பொருத்தமானவர், ஆனல் ஏனைய இருவர்களும் பொதுவுடைமைக் கட்சிப் போக்கும் நோக்கமும் அக்கட்சியிற் செல்வாக்கும் உடையவர். முன் ஒருகால ஒரு வார வெளியீடு நடத்தி அதன் மூலம் ஆட்சியாளர்களை வைததாகக் குற்றஞ் சுமத்தப்பெற்ற பெண்மணி இவ் விருவரில் ஒருவர். ஆகவே இந்த விசாரணைக் குழு பொருத்தமானதல்ல வென்று எதிர்க் கட்சிகள் யாவும் ஒருங்கு சேர்ந்து மறுப்புரை பகர்ந்திருக்கின்றனர். அன்றியும் பாராளுமன்ற மக்கள் சபையில் இவ் விசாரணையைப்பற்றி ஆட்சேபனையும் எடுத்திருக்கின்றனர். ஆனல் இதைப் பற்றிய விவாதத்தை நடத்துவதற்கு ஆட்சியாளர் பின்னிற்கின்றனர்.

செய்தித் தாள்கள் தாமாகவே ஒரு ஒழுக்க நெறிக்கமைந்து இயங்குவன. மரபு தவறியோ வாய்மையைப் புறக்கணித்தோ, நடுநிற்காமலோ நீதிக்கு மாருகவோ இவ்வெளியீடுகள் நடத்தப் பெறுவதில்லை. ஒரு பாற்கோடி உண்மையைமறைத்துச் செய்திகளைத் திரித்துக் கூறும் ஆசிரியர்கள் உளரேல் அவர் மீது நாட்டுச் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் சாட்ட இடமுண்டு ஆனல் ஆட்சியாளர்களோ எவ்வகையிலும் செய்தித்தாள்களை அடிமை நிலைமையில் ஆழ்த்தி விட வேண்டும் என்று துணிந்து நிற்கின்றனர். பழிக்குப் பழிவாங்கும் பான்மையிற் சட்டம் படைக்கஎண்ணிவிட்டனர்

உண்மைக்கு நேர்மாறானவற்றை, பழிபாதகச்செயல்களை நாட்டிற் பரப்பக்கூடியவற்றை கலகம் விளைவிக்கும் நோக்கமுள்ளவற்றைச் செய்திகளாகவோ கட்டுரைகளாகவோ வெளியிடுகின்றவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பதை ஒருவரும் மறுக்க மாட்டார், அவ்வாறுகுற்றமியற்றுபவர்களுக்குக் குற்ற தண்டம் விதிக்க வேண்டிய வகையிற் சட்டம உண்டு ஆளுங்கட்சியை ஆதரிக்க வேண்டும், எதிர்க்கட்சிகளை இகழ்ந்துபலனற்றவைகளாக்க வேண்டும் என்று திட்டமிட்டுப்போலும் சுதந்திரக்கட்சி அரசினர் செய்தித்தாள்களுக்குரிய இயல்பான சுதந்திரத்தைப் பறிக்க முயற்சி செய்கின்றனர், ஆகவே இந்நாட்டின் எதிர்காலத்தைக் காப்பாற்ற மக்கள் விரும்புவார்களேயானல், (அவ்வாறு விருமபுவது அவர்கள் கடமை) சுதந்திரக்கட்சி ஆட்சியிலே மிகத் தீங்கான இத்திட்டத்தைப் பூரணமாக எதிர்த்து, செய்தித்தாள்களின் அடிப்படை உரிமைகளைப் பேணுதல் வேண்டும்,

எழுதுவது ஒருகலை. அதற்கு இலக்கண நூலாசிரியர்கள் வரைவு செய்திருக்கின்றனர். இலக்கியங்கள் அக்கலையின் எழிலை எடுத்துக்காட்டி நிற்கின்றன. இத்தகைய கலையை அரசியல் ஆதிக்க ஆணவத்தால் நிலைகுலையச் செய்யத் துணிவது பெரும் பேதமை. கலைவளர்க்கும் அரசினர் கலையழிக்க வழிவகுப்பது விபரீதம். இந்த விபரீதம் எந்தவகையிலும் நிகழாது தடுப்பதற்கு மக்கள் [illegible] துழைப்பார்களாக.

---

ஈழத்து இன்றைய பெரியார்கள்—2.

# பண்டிதர் பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர்

[ திரு. வை, முத்துக்குமாரசுவாமி பீ, ஏ. அவர்கள் ]

பட்டம், பதவி பணம் உள்ளவர் எல்லாம் பெரியார்கள் ஆகார். தவநெறிச் சைவமும் சிவநெறிச் செல்வமும் பெற்றுத் திகழும் பெரியார்கள் ஒருசிலர் ஈழநாட்டில் இன்றும் வாழ்கின்றார்கள். அத்தகைய ஒருவரை அண்மையில் நன்கு அறிய எமக்கு வாய்ப்புக் கிடைத்தது. நான் குறிப்பிடுவது பண்டிதர் பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயரையேயாகும்.

அவர் தந்தை யாழ்ப்பாணத்து உடுவில் வரதையர் சந்ததியிலே தோன்றிய முருகேசஐயர். அவர் தாய் காரைதீவு கார்த்திகேசுஐயர் மகள் ஜானகி அம்மாள் அவர்களுடைய வீடு இன்று 'புலவர் அகம்' எனப்படுகிறது. ஐயர் அவர்கள்பிறந்த ஊர்உடுவில். அவர் சுபானு வருடப் சித்திரை மாதம் 24-ந் தேதி (12-5-1883) பிறந்தார்,

### ஆசிரியர்கள்

சங்குவேலி வைத்தியலிங்கச் சட்டம்பியார் (1894-189?) கந்தரோடை அ. கந்தையா உபாத்தியாயர் (கந்தரோடை தமிழ்ப் பாடசாலை அதிபர் (1896 - 1897) ஐயர் அவர்களின் ஆசிரியர்கள். அதன் பின் ஐயர் அவர்கள் வண்ணை நகர் ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் (1898ம் ஆண்டு தொடக்கம் 1904ம் ஆண்டுவரையும் உயர் தர வகுப்புகளில் கல்வி கற்ருர். அக்காலத்தில் அவ் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராக விளங்கியவர் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர். அவர் இலக்கணம் இலக்கியம் கற்பித்தார். யாழ்ப்பாணம் நாவலர் கோட்டத்து ஆ முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் தத்துவ சாத்திரம் கற்பித்தார் என்றும் தமிழில் அதனைச் சூத்திர ரூபமாகப் படிப்பித்தார் என்றும் அவற்றுள் சிலவற்றைஐயரவர்கள் எடுத்துக் கூறினர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு முன் தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் 19 ம் நூற்றுண்டு இறுதியில் நிறுவப்பட்டு பண்டிதர் பரீட்சை நடத்தி வந்தது வ மு இரத்தினேசுவரஐயர் 1904 ல யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தி எய்தினர்

### ஐயர் அவர்களின் பதவிகள்

ஐயர் அவர்கள் யாழ்ப்பாணம் மயிலணிச் சைவவித்தியாசாலையில் (1905 தொடக்கம் 1910 வரை) ஆசிரியராகக்கடமையாற்றினர். அதன் பின் மாத்தளை விவேகானந்த சபைச் சைவப் பிரசாரகராக (1911-1912) ஓர் ஆண்டு தொண்டாற்றினர். அச்சபையின் தலைவராக இருந்தவர் மூதலியார் இராசநாயகம் அவர்கள்.

1913-ம் ஆண்டு ஆரம்பத்தில் பண்டிதர் இரத்தினேசுவர ஐயர் இந்தியாவுக்குச் சென்று அங்கு காரைக்குடி மீனுட்சிசுந்தரேசுவரர் உயர்தரப் பாடசாலையில் 1917-ம் ஆண்டு புரட்டாதி மாதம் வரையில் ஆசிரியராக விளங்கினர்.

1917-ம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் , 1919 இறுதிவரை இலங்கையில் மாத்தளைக்கந்தசுவாமி இந்து தமிழ்ப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமை ஆற்றினர். 1920-ம் ஆண்டு சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் ஓர் ஆண்டு தமிழ்ப்பண்டிதராகக் கடமை ஆற்றினர்.

1921-ம் ஆண்டு தென்னிந்தியாவுக்குச் சென்றார். அங்கு [illegible] நாதபுரம் [illegible], திருபத்தூர் தாலுகாவில் (சிறு பகுதியில்), கண்டரை மாணிக்கம் என்னும் ஊரில் உள்ள விவேகானந்த கழகத்தில் தமிழ்ப் பண்டிதராக ஐந்து ஆண்டுகள் சேவை செய்தார். 1926-ம் ஆண்டு தனித்தமிழ் இராச்சியமாக விளங்கும் புதுக்கோட்டையில் இரத்தினேசுவரஐயர் அவர்களின் தமிழ்ப் பாண்டியத்திற்காக ஒரு யோக்கியதா பத்திரமும், பரிசும் வழங்கப்பட்டன. 1927 ம் ஆண்டு தொடக்கம் இராமநாதபுரப் பெரும் பகுதியைச் சார்ந்த ஆவினிப்பட்டி என்னும் ஊரில் திரு. அ. பழனியப்பச் செட்டியாரால் நடாத்தப்பட்ட தமிழ்க் கழகத்தில் ஆசிரியராகத் தொண்டாற்றிய காலத்தில் இரத்தினேசுவரஐயர் அவர்களுக்கு மலாய் நாடு சென்று தம் தமிழ்ப் புலமையைக் காட்டுவதற்கு ஏற்ற வாய்ப்புக்கிடைத்தது.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்னும் முதுமொழிக்கிணங்க மலாய் நாட்டில் இராமாயணத்தைப் பற்றியும் பிற தமிழ் இலக்கியங்களைப்பற்றியும் சைவ சித்தாந்த பொருள்பற்றியும் சொற்பெருக்குகள் பல ஆற்றி, தமிழ் நல்லுலகத்தை மகிழ்வித்தார்.

ஆவினிப் பட்டியில் 1935 வரை தமிழ்த்தொண்டாற்றினர் அதன் பின் 6-4-1936 தொடக்கம் ஏப்ரல் மாதம் 1942 வரையும் பர்மாவில் ரங்கூனில் கம்பைச் செட்டியார் உயர்தரப்பாடசாலையில் தமிழ்ப்பண்டிதராகக் கடமையாற்றினர்

பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்களின் சஷ்டியாப்த (60ம் ஆண்டு நிறைவு) பொன்விழாக் கொண்டாட்டம் 2-5-1943 அன்று புதுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள சிவப்பட்டி என்னும் ஊரிலே பல செட்டிமார், அம்பலகாரர் (வேளாளர்) முதலியோரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து ஐயர் அவர்கள் 1949 ம் ஆண்டு இறுதிவரை தென்னிந்தியாவிலும் பர்மாவிலும் வாழ்ந்து தமிழ் அன்னைக்கு நல்ல தொண்டுசெய்து வந்தனர்.

1950 ம் ஆண்டுத் தொடக்கத்திலே ஐயர்அவர்கள் ஈழத் தாயகத்திற்குத் திரும்பினர். இதற்கு அக்காலத்து வித்தியா அதிகாரியாக விளங்கிய திரு. கே எஸ். அருள்நந்தி அவர்களும் சேர். கநதையா வைத்தியநாதன் அவர்களும் உதவி அளித்தனர் அருள்நந்தி அவர்கள் ஐயர் அவர்களிடம் தமிழ் இலக்கியம் கற்றனர் ஐயர் அவர்கள் 1950ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் வண்ணைநகர் நீர்வாவிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள ஓர் இருப்பிடத்தில் வசித்து வருகிருர். அன்று தொடக்கம யாழ்ப்பாணச்சைவபரிபாலன சபையினர் சார்பாக சமய சற்பிரசங்கங்கள் ஆற்றுவதற்கு உறுதுணையாக விளங்குகின்றார் இப் பெரியாரின் தொண்டுகளைப் பாராட்டி யாழ்ப்பாணச் சைவப் பெரியோர் 1956ம் ஆண்டு வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்களுக்கு பொற்கிழி வழங்கிப் பொன்னுடை போர்த்தனர்.

ஐயர் அவர்களின் 80-ம் ஆண்டு ஆரம்பத்தையிட்டு 1962-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ந் திகதி சைவப் பெரியோர் சிறப்பு விழாவாகக் கொண்டாடினர். சைவ பரிபாலன சபைத்தலைவர் தம்பையா முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமைவகித்தார் அவர் தம் தலைமையுரையில் தமிழையும் சைவத்தையும் நாவலர் அடியை ஒற்றி வளர்த்து வரும் ஐயரைப் போற்றினர். சேர். ராஜா எம். முத்தையா (அண்ணமலைப் பல்கழகத்து இன்றைய அதிபர்) முதலிய பிறநாட்டு அறிஞர்களும் இந் நாட்டு அறிஞர்களும இப் பெரியாருக்குப் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் வாரி இறைத்தனர்.

ஐயர் அவர்கள் வரதபண்டியர் எழுதிய கிள்ளைவிடு தூது என்னும் நூலை வெளியிட்டனர் இதன் இரண்டாவது பதிப்பைக் கொக்குவில் சோதிடப் பரிபாலன சபை யந்திரசாலையார் வெளியிட்டிருக்கின்றனர்.

### ஐயர் அவர்கள் எழுதிய நூல்கள்

ஐயர் அவர்கள் எழுதிய "பிரசங்க இரத்தினதீபம்" என்னும் நூல் கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் 1922-ம் ஆண்டு அச்சிடப்பட்டது கடவுள், ஆன்மா, பாசம், மனிதப்பிறப்பின் மாண்பு, சிவபூசை என்னும் சீரிய இன்பமே நுதலிய ஆறு விடயங்களைப்பற்றிய கட்டுரைகள் அடங்கியது.

"திருவள்ளுவர் பெருமை" என்னும் நூல் இரத்தினேசுவர ஐயர் அவர்களால் எழுதப்பட்டு 1939 ல் பர்மாவில் வெளியிடப்பட்டது, "செந்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

---

## மணிபாகவதர் சீடனுக்குக் கௌரவிப்பு

நல்லூர் தெற்கு 'சனசமூக நிலையத்தில் 26 10-63ல் சரஸ்வதிபூசை கொண்டாடப்பட்டது. அதன் தலைவர் திரு. த இராசரெத்தினம் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. மணிபாகவதர் சீடன் திரு எஸ். கணேசசுந்தரத்திற்குக் கண்டி வள்ளுவர் மன்றத்தினரால "தமிழ் மணி"ப் பட்டம் வழங்கப்பட்டமை குறித்து மேற்படி இளைஞர் மன்றச் செயலாளர் திரு. சிவ. பரமநாதன், திரு. கணேசசுந்தரத்திற்கு மலர் மாலை சூட்டிப் பாராட்டிச் சொற்பொழிவாற்றினர். திரு. ச. கணேசசுந்தரம் "கம்பரும் கலைமகளும்" என்னும் பொருள்பற்றிக் கதாப்பிரசங்கம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் உருவச்சிலை நிதி

நாவலர் பெருமான் நமது ஈழநாட்டில் சென்ற நூற்றுண்டில் உற்ப வித்த ஓர் அவதார புருடர். தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சைவசமய அபிவிருத்திக்கும் அவர்புரிந்த தொண்டுகளின் பெருமை அளவிடற் கரியது,

அன்னரின் ஞாபகமாக ஓர் உருவச்சிலையை யாழ்ப்பாண நகரில் நிறுவுதற்கு எங்கள் சபை தீர்மானஞ் செய்துள்ளது, சபையின் விருப்பத்தை நிறைவேற்றும் நோக்கமாக, யாழ்ப்பாண மாநகரசபை குறித்த சிலையை பொதுசன நூல்நிலைய முன்றிலில் நிறுவுவதற்கு இடம் தருவதாக வாக்களித்திருக்கிறது.

திரு. த. கைலாயபிள்ளையவர்கள் எழுதி வெளியிட்ட நாவலர் வாழ்க்கை வரலாற்றில் சேர்க்கப்பட்ட நாவலர் திருவுருவப் படத்தின் தோற்றத்தைப் பின்பற்றிக் குறித்த சிலையை ஆக்கவும் அதனை ஒரு பீடத்தின்மீது அமைக்கவும் சபையார் தீர்மானஞ் செய்துள்ளனர். அதனைச் செய்தற்கு தென்னிந்திய சிற்பநிபுணர் திரு. R. N. மணியவர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். அதற்குச் செலவு ரூபா 25,000 வரை மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு தமிழ்மகனையும் தன்னுலியன்ற பொருளுதவி புரிந்து இச்சிறந்த கைங்கரியத்தைச் சபை நிறைவேற்ற உதவி புரியும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இந்நிதிக்கு உதவப்படும் தொகைகள், உதவியவர்களுடைய பெயர்களுடன் காலந்தோறும் இந்துசாதன தமிழ் - ஆங்கில பிரசுரங்களில் வெளியிடப்படும்.

த. முத்துச்சாமிப்பிள்ளை, ஆ. தனபாலசிங்கம், இ. பெ. இராசையா
தலைவர். செயலாளர். பொருளாளர்
யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, 1-8-1963.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

39, ஒல்ட்பாக் ரேட்,
சுண்டிக்குளி
சாமுவேல் பென்சமின்
—வழக்காளி

இல. M.B. 1061
எதிராக

1. மூளாய் ரேட், சுண்டிக்குளி, ஜே. ஞானப்பிரகாசம் கைம்பெண் மேரிப்பிள்ளை தனக்காகவும் தனது காலஞ்சென்ற புருஷன் ஜே. ஞானப்பிரகாசத்தின் ஆதனங்களின் பிரதிநிதியாகவும்.
2. ஒல்ட்பாக் ரேட் சுண்டிக்குளி, எம். கபிரியேல்
3. ஷியூர் பெண் செல்லமுத்து. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 1061-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963-ம் ௵ மார்கழிமாதம் 7-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1380-ம் ரூபா 900-க்கு 28-9-56 தொடக்கம் 20-12-56 வரை 9 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும், ஏற்பட்ட செலவு ரூபா 6/00-ம், இதில் ரூபா 900/- நீக்கி மிகுதி.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர்இறை 'செம்பன்புளியடி வயல்" பர. கெ. இல. நாலு (பர. கெ. இல. 4) கல்லால் போடப்பட்ட அத்திவாரமும் கிணறும் மற்றும் அதற்குரியவைகளும், எல்லை கிழக்கு சவரிமுத்து யோசேப்பு பெண் எலிசபெதத்திற்குரியவாதனம், வடக்கு ரேட்டு, மேற்கு ஆறுமுகம் வேதநாயகத்திற்கும் பெண் லூதம்மாவிற்கு முரியவாதனம், தெற்கு செசில் சலினு ஆசீர்வாதத்திற்குரிய வாதனம்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1963ம் ௵ ஐப்பசி மீ 22 உ
காரைநகர்,
M. 196 8-11-63.

---

COMMISSION SALE

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு
வழக்கு இல 7103
வழக்காளி (1) சீனிவாசகம்
கைம்பெண் பாறுபதிப்பிள்ளை
(2) V. செல்வமாணிக்கமும்
(3) பெண் பரமேஸ்வரியும்
(4) சீனிவாசகம் தனபாலசிங்கம்
எல்லோரும்
புலோலி கிழக்கு
எதிராக
சின்னையா வயிரமுத்து
வல்வெட்டித்துறை சட்டஇறையின்படி பராசக்தின் ஆதனங்களின் பிரதிநிதி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் காணும் ஆதனங்கள் 1963 ம் ஆ மார்கழி மீ 5 ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் குறித்த ஆதனமிடமாக இருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்கிறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்வெட்டித்துறை 'ஆனைவிழுந்தான் நில பர 1 3/8. டி நில பர 1¼ லும் இதில் மேற்குப் புறமாக உள்ள ¼ பங்கு குளி 11 13/16. இதில்கிழக்குப்புறமாக 1/4 பங்கு நீக்கி மிகுதியாய் உள்ள ¾ பங்கு. குளி 8 55/64, எல்லை கிழக்கு சரவணமுத்து சோமசுந்தரத்தின் உருமை காரருக்கும் ஒழுங்கையும். வடக்கு குமாரசாமிமயில்வாகனத்திற்குரிய ஆதனம். மேற்கு வயிரமுத்து விசாகப்பெருமாளின் பெண் உலகநயகம்மாவின் ஆதனம். தெற்கு சரவணமுத்து சோமசுந்தரத்தின் உரிமைக்காரராகிய விசுவலிங்கம் பெண் தங்கம்மாவும் மறுபேரும். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் வீடு குடிசை கிணறு யாவற்றிலும் சொரியலாய் 5/8 பங்கு.

| | ரூ. ச. |
|---|---|
| தீர்வைத்தொகை: | 1900-00 |
| வட்டி 12வீதம் 1000க்கு 4-7-61 தொடக்கம் 31-10-62 வரை | 150-00 |
| வட்டி 5 வீதம் 2050க்கு 1-11-62 தொடக்கம 5-10-63 வரை | 100-00 |
| செலவு பணம் | 336-96 |
| மொத்தம் | 2486-96 |

கா. முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சந்நிதிவேல்,
பருத்தித்துறை. 24-10-63.
M 191 8-11-63.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
கோப்பாய் வடக்கு கோப்பாய்
1. சிதம்பரப்பிள்ளை சண்முகமும்
2. பெண் தில்லைவனமும்
வழக்காளிகள்.

இல. M B 4820
எதிராக
இருபாலை கோப்பாய் தெற்குக் கோப்பாய்
1. கந்தையா காசிலிங்கம்
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4820 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963 ௵ கார்த்திகை மீ 16 ம்உ (16-11-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 5100-ம் 21-5-62 தொடக்கம் 13-11-62 வரைக்கும் ரூபா 3000 -த்தக்கு 12 வீத வட்டியும் அதன் மேல் மூழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 259-82½ சதமும்,

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோப்பாய் தெற்குக் கோப்பாய் கோயிற்பற்று வலிகாமம் கிழக்கு 'இளியன்தறை' பர நில இலா 57-0. கிணறும் செய்பயிர்களும், எல்லை கிழக்கு வீரகத்தி சிவகொழுந்துவினுதனமும் வழிவாய்க்காலும். தெற்கு ஆண்டி செல்லனுக்கும் மற்றவர்கட்குமூரியவாதனம். கிழக்கும் மேற்கும் கந்தையா காசிலிங்கத்தினுதனம். இதடங்களில் தெற்கெல்லையிலிருக்கும் எட்டுமுழ ஒழுங்கை புறநீங்கலாக. இல. K 163-293 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

செ. விசாகரெத்தினம்
கொமிசனரும், விலமதிப்பாளரும்.
133 பருத்தித்துறை ரேட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம், 31-10 63,
M 190 8-11-63

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M B 3931
எஸ், எம். யோர்ச்
சென்பாற்றிக்ஸ்வீதி யாழ்ப்பாணம் -வழக்காளி.
எதிராக
1. G. லூயிஸ்
குருெசோல்ற்வீதி யாழ்ப்பாணம்,
2 C. T. யோசுவா
30 சாப்பெல்தெரு, யாழ்ப்பாணம்
எதிரிகள்.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் 3931 ஆம் இலகக வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1963ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் உ சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்,

தீர்வைததொகை:-ரூபா 5550-ம் 2-3-61 தொடக்கம் 22-8-61வரையில் ரூபா 5000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்ருக [illegible] படும்வரையில் கூடிய தொகைக்கு 5 வீத வட்டியும் கொம்மிஷனுக்கு ஓட்டிய முததிரையால் ரூபா 12-ம்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்தறிக் யாழ்ப்பாணம் பகுதி சுண்டிக்குளி கோவில்பற்று சுண்டிக்குளி இறை 'குளத்து வயல்' நில. பர. 4 குளி 5¼ யில் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும் கல் வீடும் செய்பயிர்வான்பயிர்களும் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் மேற்குப் புறமாக அரைவாசியும்— இந்தக் காணிக்கு எல்லை கிழக்கு நிக்கலஸ் விலியாஸ், வடக்கு ரேட்டு, மேற்கு சந்தியா அந்தோனிப் பிள்ளையினதும் மனைவி எலிசவெத்தினுடைய ஆதனம். தெற்கு யோசெப் மாட்டினினதும் மனைவி அடிலேயிட்டினதும் ஆதனம்.

க. செல்வத்துரை
[illegible]
"[illegible] இல்லம்"
இணுவில், 5-11-631.
M 194 8-11-63.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி
1. சுகிர்தரத்தினம் கந்தையா
—வழக்காளி.

இல. M,B. 5050
எதிராக
கொக்குவில் மேற்கு கல்லூர்
1. கந்தையா சுப்பிரமணியமும்
2. கந்தையாவின் ஆதனத்தின் உரிமைதததததுவகாரி கந்தையா கைம்பெண் தங்கமமா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5050-ம் இலகக வழககில் எனககுக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1963 ௵ மார்கழி மீ 14-ம் உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தககாணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 5420-ம 3-9-62 தொடககம் 7-6 63 வரைக்கும் ரூபா 4500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைககும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 2 2/75 சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்கிறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிலபற்று கொககுவில் மேற்கு இறை "மணியர் காடு" பர. நில. இலா. 2-ம் குளி 4 1/4-ம் வீடும் கிணறும் பயிர் வகைகளும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு பிள்ளையார் கோவில் ஆதனம், மேற்கு தம்பாபிள்ளை பெண் ஆச்சிமுத்துவின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு மயிலு சின்னத்தம்பியின் ஆதனம் இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப் பதிவு கந்தோரில் D 234/291-ன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

வே. கோபாலபிள்ளை,
கொம்மிஷனர்.
22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
6-11-63,
M 195. 8-11-63.

---

## கோட்டு விற்பனவு

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டில்
கரம்பன்
நாராணபிள்ளை சின்னையா
-வழக்காளி
எதிராக
இல. M B 5069
சரவணை
இளையப்பா சிதம்பரப்பிள்ளை
-எதிராளி

இவ வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ்காணும் ஆதனம் 1963 ௵ டிசெம்பர்மீ 7 உ (7-12-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல்வட்டி ரூபா 1943-33 சதமும், மேலும் 1000 ரூபாவுக்கும் 12-9-62 தொடக்கம் 15-1-63வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைககும்வருடமொன்றுக்குநூற்றுக்கு 5 வீத வட்டியும்கோட்டுச்செலவு ரூபா 196-72½ சதமும்.

காணி விபரம்

வடமாகாணம்யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுகள்பகுதி ஊர்காவற்றுறைகோயிற்பற்று கரம்பன் இறை கிணற்றடி தணுவிலும் தணுவிலும்" நிலப்பரப்பு 28½ கிணறும் இதற்கு எல்லை கிழக்கு செல்லப்பா மனைவி பிள்ளையாச்சியினுதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு துரையப்பா மனைவி நாகமுத்துவினதும் மற்றவர்களினதுமாதனம். தெற்கு கணேசுமனைவி நாகம்மாவினுதனமும் ஒழுங்கையும்.

இது முழுவதும் பதிவு C 304/55.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
Auctioneer & Valuer,
613 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம். 18 10-63,
M 192 8-11-63.

---

## கோட்டுவிற்பனவு

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

வழ இல M B 5118
ஊர்காவற்றுறை கரம்பன்
அந்தோனிப்பிள்ளை கிறிஸ்தியாம்பிள்ளை -வழக்காளி.
எதிராக
ஊர்காவற்றுறை கரம்பன்
வேலுப்பிள்ளை ஜெகராசா
எதிராளி.

இவ்வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ்காணும் ஆதனம் 1963ம் ஆ டிசம்பர் மீ 14 உ (14-12-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4953 — 97 சதமும். மேலும் 3700 ரூபாவுக்கும் 27-9-62 தொடக்கம் 6-5-63 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும்வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 230-07½ சதமும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழப்பாண டிஸ்திறிக் தீவுகள் பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று கரம்பன்இறை 'பாலைக்காடு' நிலப்பரப்பு 2, கிணறும் வீடும் கடையும் பனைகள் தென்னை மரக்களும் இதற்கு எல்லை கிழக்கு காலஞ்சென்ற பொன்னம்பலம் இராமலிங்கததினது உரிமைக்காரர்களினுதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு ரேட்டு தெறகு முருகேசர் மகள் துரையம்மாவினுதனம். பதிவு C 263/278.

வி, செ. குட்டிப்பிள்ளை,
கோட் கொம்மிஷனர்.
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம் 18-10-63,
M 193 8-11-63,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

செட்டித்தெரு, நல்லூர்
1. இராமலிங்கம் கனகசபாபதி
2, பெண் சிதம்பரவல்லி
—வழக்காளி
எதிராக
திருநெல்வேலி
1. குட்டிப்பிள்ளை நடராசா
2, பெண் தில்லையம்மா
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4725-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963௵ மார்கழிமீ 14உ சனிக்கிழமை முற்பகல் 9½ மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் ரூபா 352/50. இதில் ரூபா 250-க்கு 27 - 3 - 1962 திகதி தொடக்கம் 24-7-62 திகதிவரைக்கும் 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும் வரைககும் முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 163 சதம் 24.

காணி விபரம்

1. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று திருநெல்வேலி இறை பூதன்குடி இருப்பு வளவும் சிதம்பரம் வளவும் நிலப்பரப்பு ஒன்றும் இதில குளி 14 வீட்டில் கிழக்குப் பக்கமாய் இரண்டு அறைகளும் கிணற்றில் பங்கும் வடகிழககுப்பக்கமாய்த் தூர்வை வழிவாய்ககாலும் பாதை உரித்தும். எல்லை கிழகு வல்லிபுரம் சிவஞானத்துக்கும் பெண் பொன்னம்மாவுக்குமூரியஆதனம், வடக்கு சடையர் வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமூரிய ஆதனம். மேற்கு கந்தர் சின்னத்தம்பிக்கும் பெண் பாககியததுக்குமூரிய ஆதனம். தெற்கு கைஒழுங்கையும் கந்தையா திருநாவுக்கரசுவுக்குமூரிய ஆதனம். இதடங்கலும் விற்கப்படும். பதிவு இலக்கம் D 237/154,

ந. ஆறுமுகம்
கொமிசனரும் விலமதிப்பாளரும்
சித்தங்கேணி,
28-10-1963.
M 188 8-11-63

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை

சிறுப்பர்.

Std. 14.

நல்லைக்கீர்த்தனம் — 50.

## கிளியே! இன்னமும் ஒருதரம்!

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : இந்தோளம் :: தாளம் : ஆதி

பல்லவி

இன்னமும் ஒருதரம் இயம்பாயோ? — கிளியே
வன்ன மயிலழகன் வடிவேல னுக்கென்றிலை. (இ)

அநுபல்லவி

நன்னகர் நல்லையிலே நாளுமமர்ந்து கொண்டு
புன்னகை புரிந்திடும் புதுமனக் கள்வனுக்கு. (இ)

சரணம்

ஆயிரம் தூதுவிட்டும் அவனைநான் காணேனடி
ஆறுமுகனில்லாமல் அணிகளும் பூணேனடி
கோயிலிலே இருப்பான் குமரனென் நாதனடி
கோவைப்பழம் தருவேன் கோதையேன் காதலை. (இ)

ஈழத்துச் சிங்கம் ... ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக்கப் பல கூட்டங்கள் நடாத்தி அவரை வெற்றியீட்டச் செய்தவர்.

யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் பல சைவத் தமிழ்ப்பாடசாலைகளை முதன் முதலாகத் தோற்றச் செய்தவர். அவை என்றென்றும் குன்றாது நடைபெற்று வருதற்கு நிலையான வருமானங்களையும் சேகரித்து வைத்துள்ளார். இவரது இலட்சியத்தைப் பின்பற்றி இப்பொழுது பல நூற்றுக்கணக்கான பாடசாலைகள் எழுந்துள்ளன, இவற்றுக்கெல்லாம் மூலபுருஷர் நாவலர் பெருமானே.

தமிழ்மக்கள் கல்வியில் மேன்மைபெற்று வாழத் தமிழ்ப் பல்கலைக் கழகமொன்று தோன்றிச் சகல கலைகளையும் பயிற்றுவிக்க வேண்டுமெனவும் இவர் திட்டம் தீட்டியிருந்தமையும் நினைத்தற்பாலது.

இவ்வளவு அருங்குணங்களும் பெரும் மூளைசாலியுமான பெரியார் வேறு நாடுகளில் தோன்றியிருந்தால் எவ்வளவோ மதிப்பைக் கொடுத்திருப்பார்கள் என்பது திண்ணம். அன்னாரது அருமைகளை இன்னமும் நம் நாடு அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை இனிமேலாகுதல் தக்கது செய்வோமாக,

நாவலர் பெருமான் அவர்களை சமயப்பெரியார் என மாத்திரம் கொள்ளாது தமிழ் மொழியைப் பெருமளவில் வளர்த்த பெரும்புலவர் எனக் கொள்ளுதலே சாலவும் பொருந்தும்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் பெருமைகளையும் அவர் தொண்டின் திறனையும்பற்றி, தமிழ்ப்பிரதிநிதியான சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் 1876 அக்டோபர் 19-ம் திகதியிலும், சேர். பொன். இராமநாதன் 1884 பெப்ரவரி 11-ம் திகதியிலும் இலங்கைச் சட்டசபையில் போற்றிப் பேசியுள்ளனர், அன்றியும் புலவர்மணி சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் 'நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழெங்கே சுருதி யெங்கே.......' எனவும் பாராட்டியுள்ளார். இன்றும் பல அறிஞர்களின் புகழுரைகளும் அனந்தம் உளவாம்.

நாவலர் பெருமான் அவர்களது நினைவு தினம் 7-12-63 ஆகும். இத்தினத்தைத் தமிழ் மக்கள் யாவரும் சிறந்தமுறையில் கொண்டாட வேண்டியது கடமையாகும், ஒவ்வொரு சைவத் தமிழ்ப்பாடசாலையும், கலாசாலைகளும், சனசமூக நிலையங்களும் பெருமளவில் கொண்டாட ஏற்ற ஒழுங்குகள் செய்தல் வேண்டும். பத்திரிகைகள் யாவும் அத்தினத்தில் ஞாபக மலராக வெளியிட்டு உதவ முன்வர வேண்டுமெனவும் வேண்டிக் கொள்கின்றேன்.

இவ்வாரம் 10-11-63 — 16-11-63

## உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பணமளவில் நல்ல வாரம். அயலவர் அந்நியர் மிக உதவுவர் குடும்பநிலை குழம்பலாக இருக்கும். உடல் நிலையும் பாதிப்பு அடையும். அலுவலகத்தில் சச்சரவுபற்றி எச்சரிக்கையாக இருந்துகொள்க, சனி மாலையை எச்சரிக்கையோடு கழிக்குக.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இனத்தவர்கள் நண்பர்களுடன் தவறான விளக்கங்களுக்கு இடமுண்டு. தூற்றித்திரிவோர்பற்றி எச்சரிக்கை. புது முயற்சிகள் தடைப்படும். ஆனால் வெற்றி பெறும், பணமளவில் நல்ல வாரம்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

உடல்நிலை அவ்வளவு திருப்தியாயிருக்காது. ஆனால் விரைவில் முன்னேற்றம் நிச்சயம். எதிரிகளுக்கு இடையூறும், உமக்குப் புகழும் நிச்சயம். வேலை வழமையிலும் அதிகமாக இருக்கும். ஆனால் போதியளவு ஈடு செய்யப்படுவீர்.

கடகராசி புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

உடற்சுகவீனத்திற்கு இடமுண்டு மன நிம்மதி இருக்கமாட்டாது. குடும்ப நிலைமையும் தொடர்ந்து நிறைவற்றிருக்கும். பணமளவில் நல்ல வாரம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தம்பி தங்கையர் மிக உதவுவர். எதிரிகளுக்கு இன்னல் நிச்சயம் மன நிம்மதி இருக்காது. இனத்தவர்களுடன் மோதலும் வண்டிகளால் தொல்லையும் உண்டாம்.

கன்னிராசி உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம் நிலபுலங்களால் இலாபம் உண்டாம். தாயாரின் உடல்நிலை ஊறுபடும். வண்டிகளால் செலவு உண்டாம்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

உணர்ச்சிவசப்படல் காரணமான சச்சரவும் நண்பர்களுடன் கலகமும் உமது சுதந்திரத்திற்குக் கட்டுப்பாடும் செலவதிகரிப்பும் ஏற்படும்,

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

[illegible] உண்டாம். பணமளவில் நல்ல வாரம். விவசாய மூலமான இலாபம் நிச்சயம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலை பிரச்சினைக்குரியது. நண்பர்கள் உறவினரிடம் தப்பபிப்பிராயங்களும் உண்டாம். செலவு பெரிதாக இருக்கும். கோள் சொல்வோர்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

மகராசி உத்தராடம் 2, 3, 4 பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

ஞாயிறு, திங்கள் காலை எச்சரிக்கையோடு கழிக்குக. உமது அலுவல்களில் பெரும் கண்டனங்களை நீர் சந்திக்கவேண்டிவரும். எதிரிகளுக்கு இன்னலும் உமக்குப் புகழும் நிச்சயம்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

வார முதல்நாள் சாதகமானது. திங்கள் மாலை, செவ்வாய், புதன் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். மிகுதிநாட்கள் சாதகமாகும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

பணமளவில் நல்ல வாரம். நண்பர்களும் உறவினரும் உதவுவர். ஆனால் உடல்நிலை ஊறுபடும். வியாழன் வெள்ளி சனி எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

## திருவெண்ணெய்நல்லூரில் சைவமகாநாடு

சிதம்பரம் ஐப்பசி 11

சந்தானகுரவர் நால்வருள் முதல்வரான ஸ்ரீமெய்கண்டதேவர் சைவசித்தாந்த சாஸ்திரஞானநூலாகிய சிவஞானபோதத்தை அருளிச் செய்துள்ள புண்ணிய பூமியாகவுள்ள திருவெண்ணெய் நல்லூரில் விஜய தசமியன்று திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ மெய்கண்டதேவர் ஆலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அழகிய பந்தலில் சிதம்பரம் "சாகித்திய கர்த்தா" ஸ்ரீ வி வி. சுவர்ணவெங்கடேச தீக்ஷிதர் தலைமையில் 12 வது சித்தாந்த சைவ மகாநாடு நடைபெற்றது.

மகாநாட்டின் பந்தல் ஸ்ரீ மெய்கண்டதேவர், அறுபத்துமூவர் திருவுருவப் படங்கள் காட்சிஅளித்தன. ஆண்களும் பெண்களும் மகாநாட்டிற்கு நிறைய வந்து கூடியிருந்தார்கள். மகாநாட்டின் தொடக்கத்தில் ஆதீன திருமுறைவாணர்களான ஸ்ரீசுந்தரேசஐயா ஸ்ரீ சோமசுந்தரதேசிகர் இருவரின் திருமுறைக் கச்சேரி 1 மணி நேரமும், ஆதீனவித்துவான்களானதிருச்சி,ஏ.கே. சி. நடராசன் குழுவினரின் கிளாரினெட் கச்சேரியும், குளிக்கரை பிச்சையபபா குழுவினரின் நாதசுரக் கச்சேரியும் சுமார் 1 மணி நேரமும் நடைபெற்றது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ. மகாசந்நிதானம் அவர்கள் மகாநாட்டுத் தலைவரான "சாகித்யகர்த்தா" ஸ்ரீ. வி. வி. சுவர்ணவெங்கடேசதீக்ஷிதரை பொன்னாடைப் போர்த்தி மலர்மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

ஆதீன மகா வித்துவான் ஸ்ரீ. ச தண்டபாணிதேசிகர் மகாநாட்டின் வரவேற்புரை கூறுகையில் ஞானசொரூபியாகிய ஸ்ரீ, மெய்கண்டதேவரின் புண்ணிய பூமியாகிய இத்திருவெண்ணெய் நல்லூரில் சென்ற 11 ஆண்டுகளாக விஜயதசமி அன்று நாம் கூடிப் பேரின்பத்தை அடைந்துகொண்டு வருகின்றோம். 12-வது ஆண்டின் இந்த மகாநாடு சந்தான குரவருள் ஒருவரான ஸ்ரீ உமாபதிதேவரைப்போல் அன்னாரின் சமூகத்தைச் சேர்ந்த தில்லைவாழந்தணரின் தலைமையில் நடப்பது மிக மிகச் சிறப்புடையனவாகும். திருமுறைகளும், சைவ சித்தாந்த சாஸ்திரங்களும் ஜீவநதியைப்போல் விளங்குவதாகும். ஆகவே சந்தானகுரவர்களின் அவிச்சின்ன பரம்பரையாக நமது திருவாவடுதுறை ஆதீனம் வளர்ந்துகொண்டிருக்கின்றது என்றும் கூறினார் திரு. மா, பா, "தினமணி" நிருபர்

## தீபாவலித்திருநாளின்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பவிக்க நாம் சிவன் அடியை வணங்குவதுதான் ஓரேவழி. நரக சதுர்த்தசி ஸ்நானம் செய்வது, மகா சிவராத்திரியில் துயிலாது சிவவழிபாடு செய்வது பிரதோஷவிரதம், சோமவார விரதம் முதலியவையின் பயனும் இதுவே. தீபாவலி தொடக்கம் மகாசிவராத்திரி வரைக்கும் தேவ உலகத்தில் இராக்காலம்; பூமியின் வட துருவத்தில் மாலை நேரம் தீபாவலிக்காலம்; காலைநேரம் சிவ இராத்திரிக்காலம். இவை இரண்டுக்கும் இடையில் நல் இருட்டுள்ள இராக் காலம். இப்பேர்ப்பட்ட சூழில்தான் தவத்திற்கு உவந்த காலம். நோன்புகளும் அனுட்டிக்கப்படும் கந்தசட்டி விரதம் ஐப்பசி சுக்கிர வாரம், கார்த்திகைச் சோமவாரம், திருக்கார்த்திகை விரதம், கார்த்திகைத் தீபம், விநாயகர் விரதம், விநாயகசஷ்டி, திருவெம்பாவை, மார்கழித் திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசம், மாசி மகம், மகாசிவராத்திரி முதலியவைகளைக் கவனிக்கலாம். அதன் பின் ஹோலிக ஷ்டமி (வட இந்தியாவில் மிகவும் கொண்டாடப்படுவது) பங்குனி உத்திரத்தில் பார்வதி பரமேஸ்வரரின் திருக்கல்யாணம் பங்குனிப் பறுவத்தில் காமன்பூரணியில் காமன் பண்டிகை என்பவை முதன்மைபெறும் நாட்கள். இவை எல்லாம் எம் முன்னோர்களுடைய பண்பாடுகளை நாம் கவனிக்க வேண்டியது. இப்படி நடந்தால் மோட்சமானது இருபுறமும் தீபம் வரிசையாக ஏற்றப்பட்டு சிவனை அடைய வழி சுலபமாய் இருக்கும். அக இருள் நீங்கும்.

## ஈழத்து இன்றைய சைவத் தமிழ்ப் பெரியார்கள்—2

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்ப்பூம்பொழில்" என்பது குமரகுருபரர், புகழேந்திப் புலவர், தமிழ் கதிர்காமப் பள்ளு, சுந்தரன் தூய வாழ்க்கை, தென்னர்பழி தீர்தத தெய்வப் பாவை, சகோதர வாஞ்சை முதலிய பன்னிரண்டு விடயங்கள்பற்றி எழுதப்பட்ட கட்டுரை நூல். இது யாழ்ப்பாணம் சண்முகநாத அச்சகத்தாரால் வெளியிடப்பட்டது

ஐயர் அவர்கள் சித்தாந்த சமய நூல்களுக்கும் பிறநூல்களுக்கும் மதிப்புரைகள் எழுதிப் பல பத்திரிகைகளுக்கும் அனுப்பிவருகின்றார் வண்ணை சிவதொண்டன் நிலையத்தில் யோகர் சுவாமிகள் திருவாக்கின்படி தாம் கந்தபுராண படனம் செய்து வருவதாக

எமக்கு ஐயர் அவர்கள் கூறினார். இப்பெரும்தமிழ்த் தொண்டர் தமது புகழும் தமிழ் வளமும் பெருகப் பலலாண்டு வாழ்க என உமாபதியை வழுத்துவோமாக!

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 8-11-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org